கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No. 110/2025 நாள்: 19.06.2026

வா.சா.1 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா – 1 அங்கையற்கண்ணி முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

1 ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் MBBS படித்துள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு பேர் ஆவார்கள். என் தம்பி பல் மருத்துவம் படித்துள்ளார். நான் மெரிட்டில் விநாயகா மருத்துவ கல்லூரியில் 2001 ஆம் வருடம் படித்தேன். நான் மெரிட்டில் மருத்துவம் படிக்கவில்லை என்றும் சுயநிதி கல்லூரி பணம் கட்டி படித்தேன் என்றும் சொன்னால் அரசாங்க ஒதுக்கீட்டில் சுயநிதி மூலம் பணம் கட்டி படித்தேன். நான் என்னுடைய படிப்பிற்காக பணம் கட்டுவதற்கு பொது குடும்ப சொத்தை விற்பனை செய்து தான் மருத்துவ படிப்பிற்கான கட்டணத்தை செலுத்தி என்னை படிக்க வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு முதல் திருமணம் 2007 ஆம் வருடம் நடைபெற்றது. முதல் திருமணத்திற்காக எனது பெற்றோர்கள் எனக்கு 25 பவுன் நகை போட்டார்கள்.

திருமணத்திற்காக எனது பெற்றோர்கள் பொது குடும்ப சொத்தை விற்பனை செய்து 100 பவுன் தங்க நகையும் 4 லட்ச ரூபாய் மதிப்பிற்கான சீதன பொருகட்களும் கொடுத்தார்கள் என்றும் வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணத்தின் போது வழங்கப்பட்ட சீதன பொருட்களான கட்டில், AC மற்றும் மின் சாதன பொருட்கள், 25 பவுன் தங்க நகைகள் மற்றும் வெள்ளி பொருட்கள் ஆகியவற்றை முதல் திருமணம் விவாகரத்து ஆனவுடன் எனது

அம்மா பெற்றுக்கொண்டார். மேற்கூறிய சங்கதியை நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முதல் திருமணத்தை முறிக்க எனது பெற்றோர்களுக்கு உடன்பாடு இல்லை.

எனக்கு போட்ட சீதன பொருட்கள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது என்றும் முதல் திருமணம் விவாகரத்து ஆன பிறகு நான் எனது பெற்றோர்களுடன் சேர்ந்து வாழவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒரு மாதம் மட்டும் தனியாக இருந்தேன். முதல் திருமணத்தை ரத்து செய்வதற்கு நான் தான் மனு தாக்கல் செய்தேன். எனது கணவர் உடனே விவாகரத்து சம்மதம் தெரிவித்தாரா என்றால் அவர் விவாகரத்து வழக்கில் எதிர்உரை தாக்கல் செய்தார். அந்த எதிர்உரையில் அவர் விவாகரத்து வழங்க மறுப்பு தெரிவித்திருந்தார். அதன் பின்னர் நடந்த விசாரணையில் விவாகரத்து வழங்க சம்மதம் தெரிவித்துவிட்டார். அந்த திருமணத்தின் பயனாக எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை என் கணவர் வசம் உள்ளது.

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் அப்பாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. பிராதில் சொல்லுயுள்ள 14 வது அயிட்ட சொத்தும் 40 வது அயிட்ட சொத்தும் ஒரே சொத்து என்றும் அந்த சொத்து எனது அம்மா கிரையம் வாங்கிய சொத்து என்றும் அது பூர்வீக சொத்து இல்லை என்றும் சொன்னால் என்னால் சரிபார்த்து தான் சொல்லமுடியும். பூர்வீக சொத்து எனது அப்பாவிற்கு எப்போது கிடைத்தது என்றால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் 28.03.2016 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தில் நான் தரப்பினராக இருக்கிறேன் என்றும் அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் சொன்னால் சரிதான். 28.03.2016 ஆம் தேதி பாகப்பிரிவினை ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ– 1 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி தாவா சொத்துக்களில் எனக்கு முழு உரிமையும் கிடைத்து விட்டது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 09.09.2016 ஆம் தேதியில் மொத்தம் எத்தனை ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நிறைய ஆவணங்கள் பதிவு

செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படம் 09.09.2016 ஆம் தேதியிட்ட ஆவண எண்.5536/2016 ஆவணத்தின் படி எனது தாயாருக்கு நான், எனது சகோதரி ஜனனி, 1 ஆம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து 4 அயிட்ட சொத்துக்களை தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்தோம் என்றால் சரிதான். 09.09.2016 ஆம் தேதியிட்டு என் தாயாருக்கு நான், எனது சகோதரி ஜனனி, 1 ஆம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து எழுதி கொடுத்த பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் நகல்.ஆவண எண்.5536/2016 தாக்கல் செய்யப்படுகிறது. அது **பி.வா.சா.ஆ– 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணம் வற்புறுத்தி வாங்கப்பட்டது.

பி.வா.சா.ஆ. 2 மூலம் பெற்ற எனது தாயார் எனது முதல் திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தையான ஸ்ரீயன் மாதவ் என்பவருக்கு 09.09.2016 ஆம் தேதியிட்டு தான செட்டில் மெண்ட் ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளார் என்றால் ஆவணத்தின் படி சரிதான். ஆனால் அவ்வாறு எழுதி கொடுத்தது எனக்கு தெரியாது. 09.09.2016 ஆம் தேதியிட்டு எனது தாயார் எனது முதல் திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தையான ஸ்ரீயன் மாதவ் என்பவருக்கு எழுதி கொடுத்த பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.5537/2016 தாக்கல் செய்யப்படுகிறது. அது **பி.வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.09.2016 ஆம் தேதி எனது அம்மா, சகோதரர் மற்றும் சகோதரிக்கு நான் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த ஆவணம் என்னிடம் காட்டப்படும் ஆவணமாகும். மேற்படி ஆவணம் எனது முதல் திருமணம் விவாகரத்து சமயத்தில் என்னை வற்புறுத்தி எழுதி வாங்கப்பட்டது. 09.9.2016 ஆம் தேதியிட்டு நான் எனது அம்மா, சகோதரர் மற்றும் சகோதரிக்கு எழுதி கொடுத்த பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.5535/2016 தாக்கல் செய்யப்படுகிறது. அது **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ. 4 ஆவணத்தில் நான் அனைத்து பக்கத்திலும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ. 4 ஆவணத்தில் பிரிவினையில்லாத 4 ல் 3 பங்கு போக மீதி எனக்குள்ள ஒரு பங்கு ரூ.39,14,275/– மதிப்பு பெருமான சொத்தை இதன்

மூலம் நான் 3 நபர்களுக்கு தானமாக கொடுத்து இன்று முதல் 3 பேருக்கு சுவாதீனத்தில் விட்டு விட்டபடியால் இன்று முதல் அடியில் கண்ட சொத்துக்களை என்று என்றைக்கும் சந்ததி பாரம்பரியமாய் சர்வ சுதந்திர பாத்தியத்துடன் அனுபவித்து கொள்வீர்களாகவும் சொத்துக்களில் எந்தவித வில்லங்கமும் இல்லை என்று உறுதி கூறிகிறேன். அடியில் கண்ட சொத்துக்களை பொறுத்து எனக்கோ எனது வாரிசுகளுக்கோ சம்பந்தப்பட்டவர்களுக்கு எவ்வித பாத்தியமும் பின்தொடர்ச்சியும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது.

விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனது கணவர் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் அதன் பின்பு எனக்கும் என் கணவருக்கும் நடந்த பேச்சு வார்த்தையில் என் பாகத்திற்கு கிடைக்க வேண்டிய சொத்துக்களை நாம் இருவருக்கும் பிறந்த ஆண் குழந்தையான ஸ்ரீயன் மாதவ் – க்கு எழுதி கொடுத்தால் நான் விவாகரத்து கொடுத்து விடுவேன் என்றும் நானும் என் கணவரும் பேசிக்கொண்டோம் என்றால் அவ்வாறு பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றும் அதன்படி நான் எனது பெற்றோரிடம் எனக்குரிய பாகத்தை எனது மகனிற்கு எழுதி கொடுத்து விடுங்கள் என்று வற்புறுத்தி கேட்டேன் என்றும் அதன் பின் காவல் நிலையத்திற்கு சென்று என்னுடைய பங்கை தர மறுப்பதாக புகார் கொடுத்தேன் என்றும் அதன் பின் எனக்கு கிடைக்க வேண்டிய பாகத்தை எனது அம்மா மூலமாக மகனிற்கு எழுதி வைத்து விட்டார்கள் என்றும் அவ்வாறு என் மகன் பெயரில் சொத்தை எழுதி வாங்கிய பிறகு தான் 09.09.2016 ஆம் தேதி நான் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

எனது பங்கை என் மகன் பெயரில் எழுதி வாங்கிவிட்டதால் மீதமுள்ள சொத்துக்கள் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 26.06.2024 ஆம் தேதி பிரதிவாதிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 26.06.2024 ஆம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்யப்படுகிது. அது **பி.வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் யாவும் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 5 அறிவிப்பில் சொல்லப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ. 5 அறிவிப்பை படித்து பார்த்து என்னால் சொல்லமுடியுமா என்றால் நான் கண் கண்ணாடி கொண்டு வராததால் சொல்லமுடியவில்லை.

பி.வா.சா.ஆ. 5 அறிவிப்பில் நான் பிராதில் சொல்லியுள்ளவாறு நான் மன குழப்பத்தில் இருந்ததாகவும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை வற்புறுத்தி மிரட்டி எழுதி வாங்கியது போன்ற சங்கதிகள் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ. 5 வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ள சங்கதிக்கு முரணான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அறிவிப்பில் சொல்லவில்லை. ஆனால் பிராதில் அந்த விவரங்களை கூறியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் 4 வது பாராவில் 06.01.2012 ஆம் தேதி எனது அப்பா மரணம் அடைந்த பின்பு கூட்டு குடும்ப உறுப்பினராக இருந்து பாகப்பிரிவினையின்றி பொதுவாக அனுபவித்து வந்ததோம் என்று சொல்லியிருக்கும் சங்கதி பொய் என்றால் சரியல்ல. ஒன்றாக தான் அனுபவித்து வந்தோம்.

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் 9 வது பாராவில் 09.09.2016 ஆம் தேதியன்று நான் தாகாத நிலை செல்வாக்கு, மன அழுத்தம், குடும்ப வற்புறுத்தல் ஆகீயவற்றிற்கு ஆட்பட்டு இருந்ததகாவும் சொல்லியிருக்கும் சங்கதி பொய் என்றால் சரியல்ல. 2 வது திருமணம் 15.07.2018 ஆம் தேதி நடைபெற்றது. எனது 2 வது திருமணத்திற்கு எனது சகோதரரும் பெற்றோர்களும் வரவில்லை என்றால் சொத்தை எழுதி வாங்கி பிரச்சனை நடந்ததால் வரவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் பாரா 10 ல் 10.05.2020 ஆம் தேதி எனக்கு நடந்த வளைகாப்பு விழாவில் எனது தாயார் தலைமை ஏற்றி நடத்தினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 15.07.2020 ஆம் தேதி எனக்கு பெண் குழந்தை பிறந்தது. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் 10 வது பாராவில் எனது தாயார் ஆரோக்கிய குறைபாடுகள் மற்றும் புற்று

நோயால் பாதிக்கப்பட்டிருந்த போது ம் மனதளவில் சாந்தியுடனும் மகிழ்ச்சியுடனும் தன் பேத்திபோடு விளையாடி நேரத்தை கழித்தன் மூலம் குடும்ப உறவுகள் மீண்டும் இயல்பு படுத்தப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எனது அம்மா ஆரோக்கியமாக இல்லை. 31.01.2021 ஆம் தேதி எனது தாயார் இறந்து விட்டார். 01.09.2020 ஆம் தேதி எனது அம்மா, 1,2 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது அம்மா கேன்சர் நோயால் மூளை வரை பாதிக்கப்பட்டு உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். 01.09.2020 ஆம் தேதியிட்டு எனது அம்மா மற்றும் 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து செய்து கொண்ட பதிவு பாகப்பிரிவினை பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் என்னிடம் காட்டப்படும் ஆவணமாகும். அது பி.வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் எனது அம்மாவின் இறுதி சடங்கில் கலந்து கொண்டேனா என்றால் வரக்கூடாது என்று சொல்லிவிட்டதால் செல்லவில்லை. எனது அம்மா இறந்து 8 மணி நேரம் கழித்து தகவல் சொல்லி இறுதி சடங்கிற்கு வரக்கூடாது என்று சொல்லிவிட்டதால் நான் போகவில்லை. நான் தொடர்ந்து இன்று வரை 8 ஆண்டுகளாக 1ஆம் பிரதிவாதியான எனது சகோதரருடன் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். மத்தியஸ்தர் மூலமாகவே பேசு கொள்வோம்.

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் 11 பாராவில் 2023 ஆம் ஆண்டில் எனது பங்கை பற்றி 1ஆம் பிரதிவாதியிடம் கேட்ட போது தான் எனது தாயார் முததுலெட்சுமி மற்றும் 1,2 பிரதிவாதிகள் இணைந்து 01.09.2020 ஆம் தேதி பாகப்பிரிவினை செய்து கொண்ட விவரம் எனக்கு தெரிய வந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால்சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தின் 12 வது பாராவில் சொல்லியுள்ள கர்ப்பபை புற்று நோய் பரவல், மூளை செயல் இழப்பு, செயல்களை புரிந்து கொள்ளவோ பேசவோ முடியாத நிலை என்று சொல்லியுள்ள விஷயங்கள் அவர் இறக்கும் தருவாயில் இருந்த நிலை என்றும் சொன்னால் சரியல்ல. 01.09.2020 ஆம் தேதி எனது அம்மா நல்ல உடல்நிலையில் இருந்தார்

என்றும் பத்திர பதிவு அலுவலகத்திற்கும் நல்ல நிலையில் வந்தார்என்றும் சார்பதிவாளர் கேட்ட கேள்விக்கும்நல்ல நிலையில் பதில்அளித்தார் என்றும் அதன் அடிப்படையில் தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றும் சொன்னால்சரியல்ல. அந்த சமயத்தில் அவர் Hemo மற்றும் radiotherapy ல் இருந்தார். அந்த சமயத்தில் அவருக்கு மூளை வரை பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

என் அம்மாவிற்கு நான் சிகிச்சை அளித்தேனா என்றால் இல்லை. சிகிச்சை அளித்த மருத்துவர் சொன்ன விஷயங்களை நான் கூறினேன். 01.09.2020 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பற்றி எனக்கு எப்போது தெரியவிந்தது என்றால் என் அம்மா இறந்த பிறகு தெரியவந்தது. தேதி ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ–5 அறிவிப்பு அனுப்புவதற்கு எவ்வளவு நாட்கள் முன்னர் எனக்கு தெரியவந்தது என்றால் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் முறையாக பிரதிபலன் பெற்றுக்கொண்டு எனக்கு விவாகரத்து வேண்டும் என்ற நிலையில் தான் எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை. நான் எழுதி கொடுத்த ஆவணம் குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய 3 ஆண்டுகளுக்குள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என் அம்மா எனக்கு பங்கு கொடுப்பதாக சொன்னதன் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை. பி.வா.சா.ஆ. 5 அறிவிப்பிலும் பி.வா.சாஆ. 4 தான செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து குறிப்பிட்டு செல்லாது என எவ்வித சங்கதிகளும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் உரிய காலத்தில் இந்த வழக்கை தாக்கல்செய்யவில்லைஎன்பதால் என்னுடைய வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 அறிவிப்பிற்கு 1ஆம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் எனக்கு வரவில்லை. எனது வழக்கறிஞரை தொடர்பு கொண்டு கேட்டேனா என்றால் அவருடைய அலைபேசி அணைத்து வைக்கப்பட்டு இருந்தது.அவர் வீட்டிற்கு சென்ற போதும்வீட்டை காலி செய்து சென்று விட்டதாக கூறிவிட்டார்கள். எனக்கான பங்கை எனது மகன் பெயரில் 09.09.2016 ஆம் தேதி பெற்றுக்கொண்டேன் என்றும் அதனால்

தான்எனது அம்மா உயிருடன் இருக்கும் காலம்வரை அந்த ஆவணம் குறித்து எந்தவித கேள்வியும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(1 ஆம் பிரதிவாதி தரப்பிலான குறுக்கு விசாரணையை 2 ஆம் பிரதிவாதி adopt செய்து கொள்கிறார்)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/– C. Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.